**கவனிக்க.**- *03.09.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்பட்டுள்ளன.*
**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1671 - 2010 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2010.09.09**

*1671 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1358 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1365 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பதவிகள் - வெற்றிடம்

## பண்டுவஸ்நுவர பிரதேச சபை

வடமேல் மாகாண அரச சேவையில் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் வெற்றிடமாகியுள்ள கீழ் காணப்படும் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக உரிய தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடத்திலிருந்து பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் செயலாளரினால் 2010.09.30 ஆந் திகதி வரை விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | பதவிப்பெயரும் சம்பளமும் | பதவி எண்ணிக்கை | கல்வித் தகைமை |
|---|---|---|---|
| 1. | பார வாகன நடத்துநர் III ஆம் தரம் PL 3-6/2006 ஏ ரூபா 12,470-10×130-10x 145 10 x 160- 12 x 170- ரூபா 18,860. | 01 | கல்விப் பொது தராதர சாதாரண தரப் பத்திர பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேம்படாத வகையில் 06 பாடங்களில் சித்தியடைந்து இரண்டு விசேட சித்தி இருத்தல் வேண்டும். |
| 2. | பாதை தொழிலாளி III ஆம் தரம் PL 1-6/2006ஏ- ரூபா 11,730-10×120- 10x 130- 10 x 145 - 12 x 160- ரூபா 17,600. | 02 | கல்விப் பொது தராதர சாதாரணத் தரப் பத்திர பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

1. **பொது தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) நன்னடத்தையுடனும் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு வயது 18 ற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் நிரந்தர வதிவிடம் கவனத்தில் கொள்வதில்லை).

(4) விண்ணப்பதாரிகளிடத்தில் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு 3 வருடத்திற்கு குறையாத காலம் பண்டுவஸ்நுவர பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும்.

2. **தொழில்நுட்ப தகைமைகள்.**- பார வாகன நடத்துநர் பதவிக்காக கீழ்க் காணப்படும் தொழில் நுட்ப அறிவு தேவை :

(1) ''ஏ'' தரத்தில் சாரதி உத்தரவுப்பத்திரம் இருத்தல் வேண்டும்.

(2) 5 வருட கால பார வாகன சாரதியாக சேவை செய்த சான்றிதழ்.

(3) பார வாகனம் நடாத்தல் பற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட I. T. A. T. சான்றிதழ்.

**சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்துடையது.

(ii) பதவி மூன்று வருட கால நன்னடத்தைக்கு உட்பட்டதாகும்.

(iii) சேர்த்துக்கொள்ளப்பட்ட பின் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை, நிதி சட்டம், திணைக்கள சுற்று, அரச/வடமேல் மாகாண சபையினால் அறிவித்தலுக்குட்பட்டதும் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் வேறு சுற்றுக்களுக்கும் சட்ட திட்டங்களுக்கும் கீழ்ப்பட்டு சேவை செய்தல் வேண்டும்.

4. **சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் முறை :**

(1) விண்ணப்பதாரிகள் இங்கு கீழ்க் காணப்படும் மாதிரி விண்ணப்பபப்படிவம் ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கமும் பிரயோசனமாகும் வண்ணம் சரி செய்து விண்ணப்பப்படிவம் 2010.09.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வண்ணம் ''செயலாளர், பண்டுவஸ்நுவர பிரதேச சபை ஹெட்டிபொல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

(2) விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி பூரணமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ் காணப்படும் சான்றிதழ்களின் பிரதி இணைத்திருத்தல் வேண்டும்.

(I) பிறப்புச் சான்றிதழின் பிரதி ;
(II) கல்வி சான்றிதழின் பிரதி ;
(III) வதிவு பற்றிய பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவு சான்றிதழ் ;
(IV) அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றிதழ் (ஒன்று கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெற்றிருத்தல் வேண்டும்) ;
(V) தொழில் நுட்ப அனுபவம் பற்றி சான்றிதழ்.

விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் போது இதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பு காலம் தாழ்த்தல், வேறுபடுத்தல் அல்லது திருத்தியமைத்தல் போன்ற பூரண அதிகாரம் பண்டுவஸ்நுவர பிரதேச சபை செயலாளருக்கு உரியதாகும்.

ஆர். எம். தர்மசேன,
செயலாளர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பண்டுவஸ்நுவர
2010, ஓகத்து 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

வட மேல் மாகாண அரச சேவையின் ............................பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.

முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.

2. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

3. நிரந்தர முகவரி :-----.

4. பால் (ஆண்/பெண்) :-----.

5. பிறந்த திகதி :- ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

6. நீர் ஓர் இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா அல்லது பதிவின் மூலமா ? :-----.

7. கல்வித் தகைமைகள் :-
க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
(i) சித்தியடைந்த ஆண்டு :-----.
சுட்டிலக்கம் :-----.

சித்தியடைந்த பாடங்கள் :-

| பாடங்கள் | சித்தி | பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(ii) வேறு தகுதி :-----.

8. தொழிற்றகைமைகள் :-

9. சேவை அனுபவங்கள் :-----.

(i) தற்போது சேவை செய்கின்ற நிறுவனம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அந்த பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
(iv) முன் சேவை செய்த நிலையத்தில் ஏற்ற பதவி :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்று இத்துடன் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விவரங்கள் பொய்யானது என்று இந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட முன் தெரியவரின் நான் தகுதியற்றவர் என்பது தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நிறுத்தப்படுவேன் என்பதை நான் அறிவேன்.

.......................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரி ஆகிய திரு. / திருமதி / செல்வி................................ தற்போது இந்த நிறுவனத்தில்................ ஆக சேவை செய்கின்றார். இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் சேவையில் இருந்து விடுவிக்கப்பட முடியும்/முடியாது அவர் எந்த விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவில்லை என்றும் சான்று பகர்வதோடு, விண்ணப்பபடிவத்தை அனுமதித்து முன்வைக்கின்றேன்.

.......................................................,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

நிறுவனம் :----.
பெயர் :----.
பதவி :----.
திகதி :-----.

9- 309

---

**பொல்கஹவெல பிரதேச சபை**

பொல்கஹவெல பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள கீழ்க் காணப்படுகின்ற அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நிரந்தர வதிவினர்களிடத்திலிருந்து விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி.சு. 6/2006 IV) படி | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 01 | மின்சார தொழில் நுட்ப வியலாளர் | தொழில் நுட்ப III | 01 | ரூ. 12,470 - 10 X 130 - 10 X 145 - 10 X 160 - 12 X 170 - ரூபா 18,860- (PL 2006A) மூன்றாவது சம்பள திட்டத்திற்கு முன் திறமையின் அளவில் சித்தியடைதல் வேண்டும் | (1) கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு முறைகளுக்கு மேற்படாமல் இரண்டு விடயங்களுக்கு விஷேட சித்தியும் விடயம் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத) (குறைந்தபட்சம் ஒரே முறையில் விடயம் 05 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். <br>(2) தற்போது மாகாண சபை அரச சேவையில் உரிய நிறுவனத்தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். <br>2009.05.12 ஆந் திகதி ஆகும் போது மின்சார தொழில் நுட்பவியலாளர் பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்திட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும். |

| தொடர் இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவி களின் எண் ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி.சு. 6/2006 IV) படி | | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | **தொழில் தகைமைகள் :** |
| | | | | | (i) | பதவியின் நிலையில் தொழில் தகைமையில் உரிய கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப/தொழில்பயிற்சி நிறுவனத்தினால் வெளியிடப்படும் N.V.Q 4 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல். |
| | | | | | (ii) | ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் உரிய தொழிலில் 3 வருடங்கள் அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) |
| 02 | வேலை நிருவா கத்தர் | இடைநிலை தொழில் நுட்பம் III | 01 | ரூ. 12,210 - 10 ×130 - 10 × 145 - 12 ×170 - ரூ. 18,600-(PL-2-2006A) மூன்றாவது சம்பள திட்டத் திற்கு முன் திறமையின் அளவில் சித்தியடைதல் | | **கல்வித் தகைமை :** |
| | | | | | (i) | கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு விடயங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத) |
| | | | | | (ii) | தற்போது மாகாண அரச சேவையில் உரிய நிறுவனத் தில் நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் அரசினால் அனுமதிக்கப்பட்ட பாடசாலையில் 8 ஆம் தரத்தில் (9 ஆம் வகுப்பு) சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| | | | | | (iii) | 2009.05.12 ஆந் திகதி ஆகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக் கொள்ளப்படும் சட்டத்திட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும். |
| | | | | | | **தொழில் தகைமை :** |
| | | | | | (i) | பதவியின் நிலையில் தொழில் தகைமையில் உரிய தொழில்பயிற்சி அதிகாரியினால் வெளியிடப்படும் தொழில்நுட்ப பயிற்சி பற்றிய N.V.Q 2 அல்லது 3 தரத்தில் சான்றிதழ் பெற்றிருத்தல். |
| | | | | | (ii) | ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்த பயிற்சி காலம் தவிர 2 வருடம் செயல்முறை அனுபவம் இருத்தல் வேண்டும். (சேவை சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) |
| 03 | பிண அடக்கஸ் தளத்தின் பொறுப் பாளர் | தொழில் நுட்பமற்ற III | 01 | ரூ. 11,730 - 10 ×120 - 10 × 130 - 10 ×145 - 12 ×160 - ரூ. 17,600-(PL-1-2006A) மூன்றாவது சம்பள திட்டத் திற்கு முன் திறமையின் அளவில் சித்தியடைதல் வேண்டும் | | **கல்வித் தகைமை :** |
| | | | | | (i) | கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு விடயங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத) |
| | | | | | (ii) | 2008.11.19 ஆந் திகதி ஆகும் போது நூலக உதவியாளர் பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள் ளப்படும் சட்டத்திட்டத்தின்படி கல்வித்தகைமை உடைய தாகும். |

| தொடர் இல. | பதவி | சேர்க்கப் படும் தரம் | பதவி களின் எண் ணிக்கை | சம்பள திட்டம் மாதாந்த (அ.நி.சு. 6/2006 IV) படி | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 04 | பிண அடக்கஸ் தளத்தின் தொழி லாளர் | தொழில் நுட்பமற்ற III | 01 | ரூ. 11,730 - 10 ×120 - 10 × 130 - 10 ×145 - 12 ×160 - ரூ. 17,600-(PL-1-2006A) மூன்றாவது சம்பள திட்டத் திற்கு முன் திறமையின் அளவில் சித்தியடைதல் வேண்டும் | (i) கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு விடயங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>(ii) 2008.11.19 ஆந் திகதியாகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்திட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும். |
| 05 | பாதைகள் தொழி லாளர் | தொழில் நுட்பமற்ற III | 01 | ரூ. 11,730 - 10 ×120 - 10 × 130 - 10 ×145 - 12 ×160 - ரூ. 17,600-(PL-1-2006A) மூன்றாவது சம்பள திட்டத் திற்கு முன் திறமையின் அளவில் சித்தியடைதல் வேண்டும் | (i) கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு விடயங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (தெரிவுப்பாடம் அல்லாத)<br>(ii) 2008.11.19 ஆந் திகதியாகும் போது ஆரம்ப இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த முறையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் அப்போது உள்ள சேர்த்துக்கொள்ளப்படும் சட்டத்திட்டத்தின்படி கல்வித் தகைமை உடையதாகும். |

**2. தேவையான வேறு தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கை குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ii) நல்லொழுக்கமும் ஆரோக்கியமாகவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பதாரி, விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கும் கடைசித்திகதிக்கு 3 வருடங்களுக்கு குறையாத காலத்தினுள் பொல்கஹவெல அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதியுனராக இருத்தல் வேண்டும். (பதிவினை கிராம உத்தியோகத்தரினால் வெளியிடப்படும் சான்றிதழ் மூலம் உரிய பிரதேச செயலாளரினால் பிரதி கையொப்பமிடப்பட்டு சான்றுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும்)

(iv) விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் கடைசி திகதிக்கு வயது 18க்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையில் நிரந்தர சேவையாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது) ;

(v) மேற்கூறப்பட்ட இலக்கம் 01 மற்றும் 02 பதவிக்காக தற்போது ஆரம்ப தொழில்நுட்ப மற்றும் இடைநிலை தொழில்நுட்ப பதவிக்காக அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் வயதெல்லை கவனத்தில் எடுக்கப்படமாட்டாது ;

(vi) விண்ணப்பதாரிகள் தண்டனைக்குரிய சட்டப்படி நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தலாகாது ;

(vii) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையில் உள்ளவராயின் அவர் விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 5 வருடங்களுள் ஏதேனும் குற்றங்களுக்குப்படாமலும் 5 வருடங்களினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- இந்த பதவிக்காக முறையான நேர்முகப் பரீட்சை மூலம் மற்றும் எழுத்து மூல பரீட்சையின் மூலம் தகுதியாயின் மாத்திரம் உரிய பதவிக்காக சேர்த்துக்கொள்ளப்படும்.

**4. சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒப்பந்தம் :**

(i) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும், விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு நிதி செலுத்தல் வேண்டும் ;

(ii) பதவி 3 வருடகாலத்திற்கு தகுதிகாண் நிலைக்கு உட்பட்டிருக்கும் ;

(iii) இந்த ஆட்சேர்ப்பு ஒப்பந்தங்களுக்கு மேலதிகமாக அரச நிர்வாக ஒப்பந்தங்களுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் உரிய அதிகார சட்டம்/சட்டங்களுக்கு உடன்படிக்கைகளுக்கும், பொல்கஹவெல பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட கூற்றுகளுக்கு ஒத்ததாக நடவடிக்கை எடுப்பதற்கு உடன்படல் வேண்டும்.

5. ஆரம்ப தகுதிகள் அனைத்தையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பு விடுக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை.**- எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு கீழ் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் 2010.10.01 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக 'செயலாளர், பிரதேச சபை, பொல்கஹவெல' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '............................பதவிக்கான விண்ணப்பம்' என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

தற்போது அரச/மாகாண சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பப்படிவத்தை தமது நிறுவனத் தலைவரூடாக அனுப்ப வேண்டியதுடன் உரிய திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் அல்லது ஏற்றுக்கொள்ளும் போது அல்லது இந்த சேர்த்துக்கொள்ளல் காலந்தாழ்த்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது இந்த அறிவித்தல் தள்ளுபடி செய்தல் அல்லது திருத்தல் என்பவற்றிற்கு பூரண அதிகாரம் பொல்கஹவெல பிரதேச சபை செயலாளரின் முடிவாகும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் காணப்படும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) பதவி பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(4) மிக அண்மையில் பெற்றுக் கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் 02 உம் (ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்)
(5) அனுபவம் பற்றிய சான்றிதழ் இலக்கம் 01 மற்றும் 02 பதவிக்காக தேவையான தொழில்நுட்ப அனுபவம் பற்றிய சான்றிதழ்.

ஜே. ஏ. அஜித் குமாரசிங்ஹ,
தலைவர்,
பொல்கஹவெல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்கஹவெல,
2010.08.26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொல்கஹவெல பிரதேச சபை**

வடமேல் மாகாண சபை அரச சேவையின் ................................ பதவிக்காக ஆட்சேர்ப்பு - 2010

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன்:-----.
   முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. நிரந்தர இருப்பிட மாவட்டம் :-----.
3. நிரந்தர முகவரி :-----.
4. பொல்கஹவெல பிரதேச சபை அதிகாரப்பிரிவினுள் இருப்பிட காலம் :-----.
5. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :-----.
6. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதிக்கு வயது :-----.
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :-----.
7. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :-----.
8. ஆண்/பெண் :-----.

9. திருமணமானவரா/திருமணமாகாதவரா? :-----.

10. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? /பதிவு முறையிலா? :-----.

11. கல்வித் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்)

12. தொழிற் தகைமை:-----.
(சான்றிதழ்களின் போட்டோ பிரதி இணைக்கவும்)

13. சேவை அனுபவம் :-----.

14. உங்களுக்கு நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்டுள்ளதா? :-----.

15. தற்போது பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அது பற்றிய விபரம் -
அந்த பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த) :-----.

இந்த விண்ணபப்பபடிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிமொழிகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவராவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளாயின் திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரி ஆகிய திரு./திருமதி/ செல்வி ....................................................... தற்போது இந்த நிறுவனத்தில் ............................... ஆக சேவை செய்கின்றார். அவர் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது அவர் எந்த விதத்திலும் விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கும் கடைசி திகதிக்கு 5 வருட காலத்தினுள் எவ்வித தண்டனைக்கும் / ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் தண்டனைக்கும் உள்ளாகியில்லாதவர் என்றும் அந்த 5 வருடத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் பெற்றுள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துவதுடன் விண்ணப்பப்படிவத்தை அனுமதித்து முன்வைக்கின்றேன்/முன்வைக்கவில்லை.

......................................................,
திணைக்கள/நிறுவனத் தலைவர் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின்
கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம் :-----.
திகதி :-----.

9-608

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பலப்பிட்டிய பிரதேச சபை

பலப்பிட்டிய பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட
பிரதேசத்திற்குள்
அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளை ஏற்றுக்கொள்ளல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தில், 122 முதல் 126 வரையிலான பிரிவுகளின் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி அலுவலக (அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள்) சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவில் ஏற்றுக்கொள்வதற்காக பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரித்த உப விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவில் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அவரால் உருவாக்கப்பட்டு இல. 520/7 ஆம் 1988.08.23 ஆந் திகதியுடைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான தென் மாகாண சபையினால் அனுமதிக்கப் பட்டதும், அதன்படி இல. 648 ஆம் 1991.02.01 ஆந் திகதியுடைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் 1 முதல் 42 வரையான பகுதி இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகிய நாள் முதல் செல்லுபடியாகும் வகையில் ஏற்றுக்கொள்ள பலப்பிட்டிய பிரதேச சபையில் 2009, யூலை 21 ஆந் திகதி நடைபெற்ற அவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை மூலம் நிர்மானமாகியுள்ளதை இத்தால் அறியத்தருகிறேன்.

என். டபிள்யூ. சுனில் விஜேரட்ன சில்வா,
தலைவர்,
பலப்பிட்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பலப்பிட்டிய,
2009, ஒற்றோபர் 27.

9- 228

---

## மிஹிந்தலை பிரதேச சபை

வரி விதிப்பு - 2011

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின், 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மிஹிந்தலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட பிரதேச சபைக் கூட்டத்தில் கௌரவ உறுப்பினர் அநுர ஜே மென்டிஸ் அவர்களின் முன் மொழிதலுடனும் கௌரவ உறுப்பினர் அனில் புஷ்பானந்த அவர்களின் வழி மொழிதலுடனும் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

தேசபந்து டபிள்யூ. ஹேமரத்ன,
தலைவர்,
மிஹிந்தலை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மிஹிந்தலை,
2010, யூலை 30.

### 1 ஆம் தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தில், 134 பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் மிஹிந்தலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மிஹிந்தலை பிரதேச சபையினால் முன்னேற்றமடையச் செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்ட அனைத்து பிரதேசங்களிலும் அமைந்துள்ள அனைத்து அசையாச் சொத்துக்களிலிருந்தும் 2011 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த பெறுமதியை ஏற்று நடவடிக்கை எடுக்கும்படி முன்மொழிகின்றேன்.

### 2 ஆம் தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின், 134 (1) ஆம் 134 (2) ஆம் பிரிவின் கீழ் மிஹிந்தலை பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மிஹிந்தலை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முன்னேற்றமடையச் செய்யப்பட்ட பிரதேசங்களிலிருந்து மதிப்பீட்டு வரி அறவிடுவதற்கும், அனைத்து அசையாச் சொத்துக்களிலிருந்தும் மதிப்பீட்டுப் பெறுமதியின் 4% மதிப்பீட்டு வரியை 2011 ஆம் ஆண்டிலிருந்து நியமித்து அறவிடப்பட வேண்டுமென்றும், மிஹிந்தலை பிரதேச சபைக்கு மதிப்பீட்டு வரி செலுத்தும், மதிப்பீட்டு வரி செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள அனைவரும் மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டு வரியை 2011 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31, யூன் மாதம் 30, செத்தெம்பர் மாதம் 30, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிகளில் முடிவடையும் (04) நான்கு காலாண்டுகளில் செலுத்துவதற்கு கட்டளையிடும்படி முன்மொழிகின்றேன்.

(அ) 2011 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்படவேண்டிய மதிப்பீட்டு வரியை 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்குகோ அல்லது அதற்கு முன்னர் செலுத்துவதாயின் 10% வீதமான கழிவும், அந்த மதிப்பீட்டு வரியை காலாண்டு களில் செலுத்துவதாயின் குறிப்பிட்ட காலாண்டின் முதல் மாதத்திற்குள் செலுத்துவதாயின் 5% வீதமான கழிவும், பெற்றுத் தருவதாக பிரதேச சபை சட்டத்தின் 134 (7) ஆம் பிரிவின் கீழ் அறியத்தரப்படுகின்றது;

(ஆ) குறிப்பிட்ட திகதிக்குள் மதிப்பீட்டு வரியை செலுத்தாதவிடத்து மதிப்பீட்டு வரியின் பெறுமதியின் 15% வீதமான (பதினைந்து வீதமான) தண்டப்பணமும் அறவிடப்படும்.-

* மாத்தளை சந்தியிலிருந்து அம்பகஹவெல வரை பாதையின் இரு புறமும் 100 மீட்டர் தூரம் அளவு (பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதி) ;
* ஏ 09 பாதையின் திரப்பனே பிரதேச சபை அதிகார எல்லையிலிருந்து ரம்பேவ பிரதேச சபை அதிகார எல்லை வரை (நுவரகம் கிழக்கு சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதி தவிர்ந்த) பிரதான பாதையின் இரு புறமும் 200 மீட்டர் அளவு தூரம்
* கந்து வட்டா பாதை (பர்டி திஸாநாயக்க மாவத்தை) இரு புறமும் 200 மீட்டர் அளவு தூரம் .
* மஹிந்த ராஜபக்ஷ மாவத்தையின் இரு புறமும் 200 மீட்டர் அளவு தூரம்.

* இசுரு உயன கைத்தொழில் வலயம்.

* மஹகந்தராவ குலத்துக்குச் செல்லும் பாதையின் இரு புறமும் 200 மீட்டர் அளவு தூரம்.

* கட்டுகெவியாவ நகரம்.

* சிப்பிகுளம் நகரம்

* மாத்தளை சந்தி கண்டி வீதி மிஹிந்தளை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தின் 200 மீட்டர் அளவு தூரம்.

* சிப்பி குளம் கலென்பிந்துனுவெவ பாதையின் இரு புறமும் 200 மீட்டர் அளவு தூரம் (மிஹிந்தளை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசம் மாத்திரம்.

9- 229

---

## பண்டாரவளை பிரதேச சபை

பண்டாரவளை பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பொதுசாலைகளை அறியப்படுத்தல் தொடர்பானது

ஊவா மாகாண பதுளை மாவட்டத்தில், பண்டாரவளை பிரதேச சபையின் அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்து இருக்கும் கீழ் காணும் அட்டவணையில் விவரமாக கூறப்படும் : பொதுசாலைகள், பண்டாரவளை பிரதேசச் சபைக்கு சொந்தமான சாலைகளாக ஏற்று நிர்வாகம் செய்யப்படும் என 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசச் சபை சட்டத்தின் 24 ஆம் சரத்தின் மூன்றாவது உபசரத்தின்படி இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

தேசபந்து எல். டபிள்யூ. சமிந்த விஜேசிரி,
தலைவர்,
பண்டாரவளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2010, ஓகத்து 18.

*அட்டவணை*

### *பொதுசாலைகள் தொடர்பான விபரம்*

| *பாதையின் பெயர்* | *அமைவிடம்* | *நீளம் (மீற்றர்)* | *அகலம் (மீற்றர்)* |
|---|---|---|---|
| **ஒபட எல்ல கிராம அலுவலர் பிரிவு 67 எப்** | | | |
| அலவத்த கம்மெத்த உட்பிரவேசிக்கும் பாதை | அலவத்த மயான அருகில் இருந்து ஒபட எல்ல பாதை வரைக்கும். | 350 | 2.5 |
| **அம்பேகொட கிராம அலுவலர் பிரிவு 67சி** | | | |
| கினிகத்தேன பதன உப பாதை | வெளிமடை பாதையிலே கிரிசங்கபோ சிறுவர் இல்லம் அருகில் இருந்து கினிகத்தேன பதன முதலாம் வீதி வரைக்கும் இருக்கும் உப பாதை உடன் கினிகத்தேன பதன ஊடாக வெளிமடை பாதை வரைக்கும். | 485 | 2.1 |
| **உடபேருவ கிராம அலுவலர் பிரிவு 65பீ** | | | |
| உடபேருவ கோட்டுவத்த பாதை | ஹீல்ஒய பாதையில் இருந்து ஆச்சிரமம் அருகில் இருக்கும் ஓடை வரைக்கும் | 900 | 5 |
| **கொன்தஹெல கிராம அலுவலர் பிரிவு 67ஏ** | | | |
| அனுர சுமேத வீதி | பனாங்கல போகொட்டுவ இருந்து வல்லேவல பாதை வரைக்கும். | 200 | 5 |

9- 310

---

## மாத்தறை மாநகர சபை

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2011 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் “ஆ” அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலோ, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்ப்பார்க்கப்பட்ட இடங்களிலோ வசியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

மாநகர சபை ஆணையாளர்,
மாநகர சபை,
மாத்தறை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2010, ஓகத்து 05.

**அட்டவணை**

| | விண்ணப்ப தாரியின் பெயர் | சங்கத் தலைவர் முகாமையாளர் செயலாளர் | சங்கத் தின் பெயர் | சங்கம் நடத்தப் படும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | டபிள்யு. ஏ. மொஹான் நலின் குமார தஹம் பிரிய 04, கமில் ஒழுங்கை, நூபே மாத்தறை. | செயலாளர் | சித்ர விளை யாட்டுச் சங்கம் | இல. 05, மெதகொட மாத்தறை |
| 2. | எம். பீ. ஹர்பீ இல. 04, லிந்த வீதி, பல்லிமுள்ள, மாத்தறை. | தலைவர் | நில்வலா விளை யாட்டுச் சங்கம் | இல. 392, பல்லி முள்ள மாத்தறை |

9-607

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.